**சுங்கத் திணைக்களத்தின் சுங்க மேலதிக நேரம், கப்பல் சரக்கு பரிசோதனைக் கட்டணம் மற்றும் சுங்க தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் நிதியம் - 2022**

-----------------------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுங்கத் திணைக்களத்தின் சுங்க மேலதிக நேரம், கப்பல் சரக்கு பரிசோதனைக் கட்டணம் மற்றும் சுங்க தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானங்கள் மற்றும் செலவுகள் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் தொடர்பான கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுங்க மேலதிக நேர நிதியத்தின் 10 சதவீதப் பெறுமதி ஒன்று அரச திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதுடன், அதன்படி வருட இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 7,052,811 தொகை எனினும், அதனை ரூபா 2,216,702 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு கடன் கொடுத்தோர் மீதி ரூபா 4,836,109 தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | சுங்க மேலதிக நேரக் கணக்கிற்கு வருடாந்தம் கிடைக்கும் பெறுவனவுகளில் இருந்து 10% அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படுகின்றது. | திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படும் பெறுமதி சரியாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) மேலதிக நேர வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது வருமானம் சேகரிக்கும் நிலையங்களுடன் மதிப்பீடு செய்யப்பட்ட மேலதிக நேர மணித்தியாளங்கள் மற்றும் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் எண்ணிக்கை தொடர்பாக ஏற்படுத்தியிருந்த இணக்கப்பாடுகள் உள்ளடங்கிய உடன்படிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | - | இணக்கப்பாடுகள் உள்ளடங்கிய உடன்படிக்கை | கணக்குப் பிரிவினால் மேலதிக நேர கொடுப்பனவு செய்யப்படுவது உரிய பிரிவுத் தலைவரினால் மேலதிக நேர வேலையில் ஈடுபட்டதெனவும், மேலதிக நேர கொடுப்பனவு செலுத்துவதற்கு தகைமை காணப்படுகின்றதென பரிந்துரைக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கே க ஆகும். அத்துடன் அவை தொடர்பாக தகவல்கள் உரிய பிரிவுகளில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு இயலுமாக இருக்கின்றது. | உரிய நிறுவனங்களுடன் முறையான உடன்படிக்கைக்கு அனுகுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மேலதிக நேரம் மற்றும் கப்பல் சரக்கு பரிசோதனை செய்யும் கட்டண மீதிகள் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கப்பல் சரக்கு பரிசோதனைக் கட்டணம் வெளிப் பரிசோதனைக்காக பங்குபற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் அதற்காக செலவிடப்படும் காலம் ஆகியவற்றை எதிர்வு கூறுவதற்கு முடியாமல் உள்ளது எனவும், பல்வேறு பிரிவுகளில் செலுத்த வேண்டியிருந்த சில கோவைகள் நிதிப் பிரிவிற்கு அனுப்பப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளது எனவும் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அதன் காரணமாக இந்த செலுத்த வேண்டிய பெறுமதிகளின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | 475,205,493 | கப்பல் சரக்கு பரிசோதனைக் கட்டணம் வெளி பரிசோதனைகளுக்கு பங்குபற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் அதற்காக செலவிடப்படும் காலம் தொடர்பான தகவல்கள். | சுங்கத் திணைக்களத்தின் கப்பல் சரக்கு பரிசோதனைக் கட்டணம் மற்றும் வெளிப் பரிசோதனைக்காக பங்குபற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் அதற்கு செலவிடப்படும் காலம் என்பன தீர்மானிக்கப்படுவது அந்தத் துறையில் கடமையாற்றும் சுங்கப் பணிப்பாளர்களினாலேயே. அதன்படி, கொடுப்பனவுக் கோப்புக்கள் உரிய சுங்கப் பணிப்பாளரினால் சான்றுபடுத்தப்பட்டு கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது. | செலுத்த வேண்டிய மேலதிக நேரம் மற்றும் கப்பல் சரக்குப் பரிசோதனை தொடர்பாக முறையான பதிவேடுகள் பேணிச் செல்லப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடன்பட்டோர் மீதி ரூபா 68,682,571 தொகையாக | கடன் பட்டோர் மீதிகள் பெற்றுக்கொள்வது கப்பல் கம்பனி/ கப்பல் முகவர் நிறுவனம் தமது கருமத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு | நிலுவை கடன் பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்கு முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| காணப்பட்டதுடன், அவற்றில் 4 வருடங்களை விட பழமையான கடன்பட்டோர் மீதி ரூபா 260,180 தொகையும், 3 வருடங்களை விட பழமையான மீதி ரூபா 1,125,605 தொகையும், 2 வருடங்களை விட பழமையான மீதி ரூபா 1,991,434 தொகையும் ஒரு வருடத்தை விட பழமையான மீதி ரூபா 3,648,600 தொகையும் காணப்பட்டது. அறவீடு செய்யப்பட வேண்டிய மொத்த கடன்பட்டோர் மீதியில் ரூபா 2 மில்லியன் முதல் ரூபா 15 மில்லியன் வரையான நிலுவை காணப்பட்ட 4 விமான கம்பனிகளும் தீர்வை பணிப்புக் களஞ்சியங்கள் மற்றும் 6 கப்பல் கம்பனிகளும் காணப்பட்டது. | முன்னர் வழங்கப்படும் மதிப்பீட்டுப் பெறுமதி மீதாக காணப்பட்டவுடன் கொடுப்பனவு மேறகொள்ளும் போது அனேகமாக இந்த பெறுமதி மாற்றமடையக்கூடும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2017 ஏப்ரல் 19 திகதிய 3/2017 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | அனைத்து அரச ஊழியர்களும் தமது உள்வரவு மற்றும் வெளிச் செல்லலை பதிவு செய்வதற்காக விரலடையாள இயந்திரத்தை பயன்படுத்த வேண்டியிருந்த போதிலும் இலங்கை சுங்கத்தில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்கள் எவரும் அந்த தேவைப்பாட்டினை நிறைவேற்றியிருக்காத போதிலும் மீளாய்வாண்டிற்காக ரூபா 938,872,620 இற்கான தொகையொன்று மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு என செலுத்தப்பட்டிருந்தது. இந்த கொடுப்பனவு மேற்கொள்ளும் போது வழமையான கடமை நேரத்துக்கு புறம்பாக சேவையில் ஈடுபட்டதை உறுதிப்படுத்துவதற்காக ‘‘மேலதிக பதிவுப் பத்திரம்’’ பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், | சுங்க திணைக்களத்தின் சேவைகளின் விஷேடத்துவ நிலைமை காரணமாக மற்றும் உலக சுங்க அமைப்பின் மூலப் பிரமாணங்களின் படி சேவை வசதிகள் வழங்குவதற்கு சுங்கத்திற்கு கடப்பாடு ஒன்று காணப்பட்டமையால் கடமை காலவரையின்றி 24 மணி நேரமும் சேவையை வழங்குவதற்கு சுங்க ஊழியர்களுக்கு நேரிட்டிருந்தது. அதன்படி, விரலடையாள இயந்திரங்கள் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய வசதியீனங்களை தவிர்த்துக்கொண்டு மேற்கூறிய சேவையை முறைப் பிரகாரம் பேணிச் | அரச சேவையின் அனைத்து உத்தியோகத்தர களுக்கும் உரிய பொதுச் சுற்றறிக்கையின் படி சுங்க பதவியணியினரும் செயற்பட வேண்டும் என. |

| | | | |
|---|---|---|---|
| | அங்கு மேலதிக நேர கடமையில் ஈடுபட்டார் என ஊழியர்கள் பல நாட்களை ஒரே தடவையில் பதிவு செய்தல் மற்றும் நாளாந்தம் உயர் உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வைக்கு ஆளாக்கப்படாமை ஆகிய உள்ளகக் கட்டுப்பாடு பலவீனவாக காணப்பட்டது. மேலும், மீளாய்வாண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலப் பகுதிக்கு உரிய பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நான்கு பிரிவுகளைச் சேர்ந்த ஊழியர்கள் விடுமுறை பெற்றுக்கொள்ளப்பட்டதென விடுமுறை பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | செல்வதற்கு தற்போது செயற்படும் கையொப்பமிடும் பதிவேடு செய்முறையை தொடர்ந்தும் பேணிச் செல்வதற்கு தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் வினவப்பட்டுள்ளது. | |
| (ஆ) 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை | | | |
| (i) பந்தி 15(1)(2)(இ) | ஏனைய பொறுப்புக்களை தீர்த்த பின்னர் மீதியாக காணப்படும் பணம் திரண்ட நிதியத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மேலதிக நேர நிதியத்தினுள் திரண்டிருந்த ரூபா 1,765,360,124 இற்கான தொகையொன்று நீண்ட காலம் முதல் காணப்பட்ட போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | கணக்கில் பெயரளவில் காணப்படும் திரண்ட தொகை மிகைத் தொகை என காட்டப்பட்டிருந்த போதிலும், இந்த மீதி பௌதீக ரீதியாக திணைக்களக் கணக்குகளில் காணப்படாததுடன், நடைமுறையிலுள்ள செய்முறையின் படி தற்போது திறைசேரியின் பிரதிச் செயலாளரின் வங்கிக் கணக்கிற்கு (திரண்ட நிதியம்) அனுப்பப்படுகின்றது. எவ்வாறாயினும், கடமை நேரத்தில் பின்னைய நேரங்களில் வழங்கப்படும் சேவைக்காக இந்தப் பணம் பல்வேறு வெளித் தரப்பினர்களிடம் அறவீடு செய்யப்படும் தொகையினால் ஆக்கப்பட்ட திரண்ட | சுற்றறிக்கைக்கு அமைவாக இருக்க வேண்டும் என. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மீதியொன்றாக காணப்படுவதனால் திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | |
| (ii) | பந்தி 15(3)(1)(ஈ) | நிதி ஆண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் சான்றுபடுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றுகை அறிக்கை அரச நிதித் திணைக்களத்திற்கு பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், நிதிக் கூற்றுக்கள் 2023 மார்ச் 29 திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிதியமொன்றுக்குரிய அடிப்படைப் பகுதியாகிய வங்கிக் கணக்கொன்று மற்றும் காசேடொன்று, பேரேடொன்று மற்றும் உப பேரேடுகள் பேணிச் செல்லல் கணப்படாததுடன், நிதிய முகாமைத்துவத்திற்கென பிரத்தியேகமான பதவியணியொன்று காணப்படவில்லை. அதன்படி, இந்த கணக்குக்கு உரிய தகவல்கள் சுங்கத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையில் அடங்குவதுடன், இந்த கணக்கிற்காக வேறான செயலாற்றுகை அறிக்கை ஒன்று தயாரிக்கப்படுவதில்லை. | சுற்றறிக்கைக்கு அமைவாக இருக்க வேண்டும். |
| (iii) | பந்தி 15(3)(2) | நிதியத்தின் கணக்கு அலுவல்களுக்காக தனியாக வங்கிக் கணக்கொன்று பேணிச் சென்றிருக்கவில்லை. | தனியாக கணக்குத் தொகுதிகள் மற்றும் வங்கிக் கணக்கொன்று பேணிச் செல்லல் நடைமுறைச் சாத்தியமாக மேற்கொள்ள முடியாது. | சுற்றறிக்கைக்கு அமைவாக இருக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 180,967,588 இற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 176,966,439 தொகை ஆக இருந்தது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 4,001,149 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு சேகரிக்கப்பட்ட மேலதிக நேர வருமானம் ரூபா 38,105,354 தொகையினால் குறைவடைதல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான மேலதிக நேர வருமானம் என ரூபா 841,480,851 தொகை சேகரிக்கப்பட்டிருந்ததுடன், திரண்ட நிதியத்திற்கான பங்களிப்பு மற்றும் கடன் பட்டோருக்கான ஒதுக்கம் சீராக்கலின் பின்னர் நிதியத்தின் மொத்த செலவு ரூபா 938,780,650 தொகையாக இருந்தது. கடந்த காலங்களில் சேகரிக்கப்பட்ட மேலதிக நேர வருமானம் நிகழ் காலத்தில் மேலதிக நேர கொடுப்பனவிற்கு பயன்படுத்துதல் பொறுத்தமற்ற போதிலும் மீளாய்வாண்டின் போது மேலதிக நேர நிதியத்தின் பற்றாக்குறையாகிய ரூபா 180,967,588 தொகையினை தீர்த்துக்கொள்வதற்காக கடந்த ஆண்டில் நிதியத்தில் காணப்பட்ட திரண்ட மீதிகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த பற்றாக்குறை ஏற்படல் தொடர்பாக 2018 ஒக்தோபர் 01 திகதி முதல் ஒரு மணித்தியாளத்திற்கு செலுத்தப்படும் மேலதிக நேர கொடுப்பனவு 50 சதவீதத்தினால் அதிகரிப்பதற்காக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் காரணமாகவே ஆகும். மேலும், மேலதிக நேர ரேட்டினை அதிகரிப்பதற்கு மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு செலுத்த வேண்டிய புதிய தரப்பினரை உட்படுத்துவதற்காக திணைக்களத்தின் உள்ளகக் குழுவொன்றினால் எடுக்கப்பட்ட முறைசாரா தீர்மானத்திற்காக நிச்சயிக்கப்பட்ட செல்லுபடியாகும் அங்கீகாரம் ஒன்று நிதி அமைச்சிலிருந்து இது வரை பெற்றிருக்கவில்லை. | சுங்கத் திணைக்களத்தின் மேலதிக நேரக் குழுவின் மூலம் நாட்டில் அவ்வப்போது காணப்படும் பொருளாதார நிலைமை மற்றும் அரச கொள்கைகளுக்கு அமைவாக மேலதிக நேர ரேட்களை உயர்த்துவதற்கு மற்றும் செலுத்த வேண்டிய தரப்பினரை உட்படுத்துவதற்கு பரிந்துரை வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்காக சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 2007.10.26 திகதிய வெளியிட்டிருந்த இலக்கம் 17/1520 கொண்ட கட்டளையின் படி மற்றும் அதன் திருத்தங்களின் படியும் சுங்க மேலதிக நேர கொடுப்பனவு தொடர்பாக தீர்மானம் எடுக்கும அதிகாரி சுங்கப் பணிப்பாளர் நாயகம் என குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதியத்தின் பெறுவனவுகளை மிகைத்து கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும் என மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு செய்முறை முறைப்படுத்தப்பட வேண்டும் என. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1967 ஆண்டு முதல் 2007 ஆண்டு வரையான காலப் பகுதியினுள் 65 நிறுவனங்களினால் இலங்கை சுங்கத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 220,418 இற்கான தொகை பொதுவான சேமிப்புக் கணக்கில் ஈடுபடுத்துவதன் மூலம் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 13,062,659 தொகைக்கான வட்டித் தொகையொன்று உழைத்திருந்ததுடன் வருட இறுதியில் உள்ளவாறு முதலீட்டுக் கணக்கின் மொத்த பெறுமதி ரூபா 13,283,077 தொகையாக இருந்தது. எவ்வாறாயினும், இந்த நிறுவனங்களின் நிலைத்திருத்தல், தொடர்ச்சியாக சேவைகள் வழங்கல், திணைக்களத்துடன் காணப்படும் இணைப்பு ஆகியமை தொடர்பாக எதுவித விசாரணைகளும் மேற்கொள்ளாமல் குறிப்பிட்ட மீதி கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டு காணப்பட்டது. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 65 நிறுவனங்களுடன் பல வருட காலமாக கொடுக்கல் வாங்கல் ஏதும் நடைபெற்றிருக்காமையால் குறிப்பிட்ட கணக்குகளை மூடிவிட்டு கணக்கு மீதியுடன் வட்டி வருமானத்தை சுங்க பணிப்பாளர் நாயகத்திற்கு விடுவிக்கும் இயலுமை தொடர்பாக தேசிய சேமிப்பு வங்கியில் வினவப்பட்டது. அதற்காக வைப்பு செய்தவர்களின் விருப்பம் அல்லது விழிப்புணர்வு தேவை என வங்கியினால் அறிவிக்கப்பட்டிருந்தது. | தற்போது சேவை வழங்கும் நிறுவனங்களின் உளமை தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொண்டு முறையான கணக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும் என. |
| (இ) | நிதியத்தின் பற்றாக்குறை முன்னைய ஆண்டை விட ரூபா 4,001,149 தொகையினால் அதிகரித்திருந்ததுடன், பற்றாக்குறையை தீர்ப்பதற்காக திரண்ட நிதியத்தை பயன்படுத்தியிருந்தமையால் 2018 ஆண்டு முதல் திரண்ட நிதியத்தின் மீதி கிரமமாக பின்னடைவொன்று ஏற்பட்டிருந்தது. அதன்படி, 2018 ஆண்டில் ரூபா 2,331,074,672 தொகையாக காணப்பட்ட திரண்ட நிதிய மீதி 2022 திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 1,765,360,124 தொகை வரை குறைந்திருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | திரண்ட நிதியத்தன் மீதி கிரமமாக வீழ்ச்சியடைதல் தொடர்பாக போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2007 ஒக்தோபர் 26 திகதிய 1520/17 இலக்கம் கொண்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதி விஷேட வர்த்தானியின் பிரகாரம் சுங்க உத்தியோகத்தர்களுக்காக விதிக்கப்பட்டுள்ள வழமையான கடமை நேரங்களுக்கு புறம்பான | சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி சுங்கக் கருமங்கள் நிறைவேற்றுவதற்காக சுங்க சேவை உத்தியோகத்தர் தவிர ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களையும் | மேலதிக நேர கொடுப்பனவை இனங் காண்பதற்காக முறையான செய்முறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| நேரங்களில் அல்லது கடமைகளுக்காக சுங்கம் மூடியிருந்த நாட்களில் அந்த உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்படும் சேவைக்கான கட்டணம் அறிவீடு செய்யப்படும் அனைத்து பணமும் மற்றும் ஏதேனும் சுங்க உத்தியோகத்தர் ஒருவர் தனது குறிப்பிட்ட அலுவலகத்தில் அல்லது சேவையாற்றும் இடம் தவிர ஏனைய அலுவலகங்களில் அல்லது இடமொன்றில் கடமையில் ஈடுபடுவதற்காக சேகரிக்கப்படும் கட்டணம் அல்லது அறவீடு செய்தல் மேலதிக நேரக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டும். அதன்படி, சுங்க உத்தியோகத்தர்கள் மேலதிக வேலையில் ஈடுபடுவதன் மூலம் கிடைக்கக் கூடிய தொகையினை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேர கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதலும், சுங்க உத்தியோகத்தர்களை தவிர திணைக்களத்தின் ஏனைய உத்தியோக்கர்கள் அடங்கக் கூடியவாறு இந்த நிதியத்திலிருந்து மேலதிக நேர கொடுப்பனவு செலுத்தப்படுவதனால் அவ்வாறு மேலதிக நேர நிதியத்தின் கணக்கு மீதி படிப்படியாக நலிவடைந்திருந்தது. | சேவையில் ஈடுபடுத்துவதற்காக சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு இயலுமாக இருந்தது. அதன்படி, சுங்கத் திணைக்களத்தின் சுங்க சேவை உத்தியோகத்தர்கள் நாடளாவிய சேவைகளுக்குரிய உத்தியோகத்தர்கள் மற்றும் இணைந்த சேவையின் பல்வேறு உத்தியோகத்தர் கடமையாற்றுகின்றனர். 2007.10.26 திகதிய 17/1520 இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தானியில் சுங்கத் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகளுக்காக அறவீடு செய்யப்படும் கட்டணம் அல்லது அறவீடு செய்தல் பல பிரிவுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அந்த அலுவல்களை மேற்கொள்வதற்காக ஏனைய அனைத்து பிரிவுகளும் இணைந்து செயற்பாட்டுக் கடமை அலுவல்கள் மேற்கொள்ள வேண்டும். அதன் காரணமாக அந்த சேவைகளை நிறைவேற்றுவதற்கு பங்களிப்பு செய்யும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் மேலதிக நேர கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. | |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது நிதியத்திற்கு அறவீடு செய்யப்பட்ட வருமானம், மேலதிக நேரம், கப்பல் சரக்கு பரிசோதனை மற்றும் தகவல் தொழில்நுட்ப அலுவல்களுக்காக முறையே ரூபா 841,480,851 தொகை மற்றும் ரூபா 228,163,550 தொகை மற்றும் ரூபா 14,976,000 தொகையாக | | |

| | | |
|---|---|---|
| காணப்பட்டது. இந்த விடயங்களின் அலுவல்களில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேர வருமானத்தில் 111 சதவீதம் என ரூபா 938,872,620 தொகையும், கப்பல் சரக்கு பரிசோதனைக்காக வருமானத்தில் 50 சதவீதம் என ரூபா 114,081,775 தொகையும் மற்றும் தகவல் தொழில்நுட்ப வருமானத்தில் 80 சதவீதம் என ரூபா 11,980,800 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. மேற்கூறிய கொடுப்பனவு செய்முறையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) மேலதிக நேர நிதியத்தின் கொடுப்பனவுகள் முறையான கட்டுப்பாடு ஒன்றின் கீழ் மேற்கொள்ளப்படுவதில்லை என முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் இந்த நிலைமையை முறைப்படுத்துவதற்காக இதுவரை நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | சர்வதேச வர்த்தகத்திற்காக வசதிகள் வழங்குவதன் மூலம் சுங்க திணைக்களத்திற்கு மேலதிக நேர வருமானம் சேகரமாவதுடன், அதற்காக ஈடுபடும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் மேலதிக நேர கொடுப்பனவு செலுத்தப்படுகின்றது. திணைக்களத்தின் மேலதிக கொடுப்பனவு தொடர்பாக பணிப்பாளர் நாயகத்திற்கு தீர்மானம் எடுப்பதற்காக பரிந்துரை வழங்கவதற்காக மேலதிக நேர குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது. | தற்போது மேலதிக நேர கொடுப்பனவு செய்முறை மீளாய்வு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) ஆண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்த மேலதிக நேர வருமானத்தை மிகைத்து ரூபா 97,391,769 தொகை மேலதிக நேர செலவு என உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக சேகரிக்கப்பட்ட மேலதிக நேர வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 3,441,271 இனால் அதிகரித்திருந்தது. | அடிக்கடி வெளியிடப்படும் அரச கொள்கைகளுக்கு இணங்க மற்றும் 2007.10.26 திகதிய இலக்கம் 17/1520 கொண்ட அதிவிஷேட வர்த்தமானி மற்றும் அதன் திருத்தங்கள் பிரகாரம் நாளதுவரை ஆக்கப்படாத கட்டண எண்ணிக்கைகள் அறவீடு செய்யப்படுவதனால் சேகரிக்கப்பட்ட மேலதிக நேர வருமானம் குறைந்திருந்தது. நிதியத்தின் கீழ் வருமானம் சேகரித்தல் தொடர்பாக மீண்டும் கவனம் செலுத்தி நாளதுவரை ஆக்குவதற்காக கட்டண அறவீட்டுக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், அந்தக் குழுவின் பரிந்துரையின் படி | சேகரிக்கப்பட்ட மேலதிக நேர வருமானத்தை மிகைத்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | | எதிர்காலத்தில் மேற்கூறிய ரேட்கள் நாளதுவரை ஆக்கப்படும். | |
| (இ) | கப்பல் சரக்கு பரிசோதனை கட்டண கணக்கில் நடைமுறை ஆண்டின் வருமானம் ரூபா 25,213,318 தொகையினால் குறைந்திருந்ததுடன், அது முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப 9.95 சதவீதத்தினால் வீழ்ச்சியடைதல் ஆகும். | அடிக்கடி வெளியிடப்படும் அரச கொள்கைகளுக்கு இணங்க மற்றும் 2007.10.26 திகதிய இலக்கம் 17/1520 கொண்ட அதிவிஷேட வர்த்தமானி மற்றும் அதன் திருத்தங்கள் பிரகாரம் நாளதுவரை ஆக்கப்படாத கட்டண எண்ணிக்கைகள் அறவீடு செய்யப்படுவதனால் சேகரிக்கப்பட்ட கப்பல் சரக்கு பரிசோதனைக் கட்டணக் கணக்கின் வருமானம் குறைந்திருந்தது. | வருமானம் உழைத்தல் உரிய முறையில் முகாமைத்துவப்படுத்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை சுங்கத்தின் உத்தியோக்கத்தர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவு இலங்கை சுங்கத்தின் மேலதிக நேர நிதியத்தின் மூலம் போலவே இலங்கை சுங்கத்தின் 247-1-1-1002 செலவுத் தலைப்பின் கீழும் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், சில உத்தியோகத்தர்களுக்கு சுங்க மேலதிக நேர நிதியத்தின் மூலம் மாதாந்தம் 600 மணித்தியாள உச்ச அளவின் கீழ் மேலதிக நேர கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் நிலைமை ஒன்றின் கீழ் ஒரே உத்தியோகத்தருக்கு மேலதிக நேர நிதியத்தில் இருந்து போலவே, திரண்ட நிதியத்திலிருந்து செலுத்தும் இயலுமை காணப்படுகின்றன என அவதானிக்கப்பட்டது. | திரண்ட நிதியத்தில் இருந்து 247-1-1-1002 செலவுத் தலைப்பின் கீழ் செலுத்தப்படுகின்ற மேலதிக நேர கொடுப்பனவு 2023 ஆண்டு முதல் இடைநிறுவத்தப்பட்டிருந்தது. மேலும், உச்சமட்ட 600 மணித்தியாள மேலதிக நேர கொடுப்பனவிற்கு உரிமையுள்ள உத்தியோகத்தர்களுக்கு எந்த முறையினால் ஏனும் திரண்ட நிதியத்திலிருந்து மேலதிக நேர கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை. | ஒரே உத்தியோகத்தருக்கு இரண்டு செய்முறைகளின் மூலம் மேலதிக நேர கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதற்கான இயலுமையை பரிசோதனையை செய்ய வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மேலதிக நேர நிதியத்தில் 2022 இற்கான வருமானம் என ரூபா 1,111,915,500 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், உழைக்கப்பட்ட உள்ளவாறான வருமானம் ரூபா | மேலதிக நேர நிதியத்தின் வருமானம் மதிப்பீடு செய்யப்படுவது அந்தச் சந்தர்ப்பத்தில் காணப்படும் தேசிய கொள்கைகள் மற்றும் | பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக |

841,480,851 தொகையாக காணப்பட்டமையால் மதிப்பீட்டு வருமானத்தை விட உள்ளவாறான வருமானம் ரூபா 270,434,649 இற்கான பிரதிகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது. இது மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 24 சதவீத பின்னடைவொன்றாகும். இதற்கு முக்கிய காரணம் என ''கொழும்பு'' உப தலைப்பின் கீழ் காணப்பட்ட வருமானம் ரூபா 270,578,467 தொகையினால் குறைவடைதல் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அதன்படி, மேலதிக நேர நிதியத்தின் பாதீட்டு மதிப்பீட்டின் படி ரூபா 723,950 இற்கான மேலதிக வருமானம் ஒன்றினை எதிர்பார்த்த போதிலும், பெறுபேறாக இருந்தது ரூபா 180,967,588 இற்கான பற்றாக்குறையொன்றாகும்.

சட்ட சட்டகத்தினுள்ளேயாகும். எனினும், 2022 ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் முன்னிலையில் இறக்குமதிகள் வரையறுக்கப்பட்ட காரணத்தினால் மதிப்பீட்டு வருமானம் குறைந்திருந்தது.

பயன்படுத்தப்பட வேண்டும்.